**Training-cum-demonstration on Biological Control of Invasive Whiteflies Infesting Coconut held on 06th February, 2023 at Karur, Tamil Nadu**



நங்கவரம்,கவுண்டம்பட்டியில்,

## தென்னை மரங்களை பாதிக்கும் நோய் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்

▶ நங்கவரம் கவுண்டம்பட்டி பகுதியில் பகுதியில் தென்னை மரங்களை பாதிக்கும் வெள்ளை சுருள் ஈ தாக்குதல் நோய் குறித்து விவசாயிகளுக்கு நடைபெற்ற விழிப்புணர்வு பயிற்சி மற்றும் முகாமில் வேளாண் விஞ்ஞானி செல்வராஜ் தென்னை மரங்களுக்கு மருந்து தெளிப்பது குறித்து விளக்கம் அளித்தார்.

**குளித்தலை, பிப்.7:** கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள தென்னை மரங்களில்தற்போது அதிக அளவு வெள்ளை சுருள் ஈ தாக்குதல் நோய் பரவி வருகிறது.

இதனால் தென்னை மரங்கள் முழுவதும்காய்ந்து மரம் சேதம் அடையும் நிலையில்பாதிப்புஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் விதமாக தென்னை மரம் வளர்க்கும்விவசாயிகளுக்கு குளித்தலை அருகே நங்கவரம் கவுண்டம்பட்டியில் கரூர் மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தின் மூலம்தென்னைமரங்களில் வெள்ளைசுருள்ஈதாக்குதல் காணப்படுவதை எவ்வாறு கட்டுப்படுத்துவது குறித்து தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி முனைவர் செல்வராஜ், கலந்து கொண்டுவிவசாயிகளுக்கு பூச்சிதாக்குதலைஎவ்வாறு கட்டுப்படுத்துவது குறித்தும்,தொழில்நுட்ப பயிற்சி அளித்து விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து தென்னை மரங்களில் பூச்சிகொல்லி மருந்துகள் எவ்வாறு அடிப்பது, அதில் பூச்சிகளை கொல்லும் எதிர் பூச்சிகளை உருவாக்குவது குறித்த செய்முறை பயிற்சியும் அளித்து காண்பித்தனர். நிகழ்ச்சியில் கே.வி.கே. முதுநிலை வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் மற்றும் வேளாண் அறிவியல் மைய வல்லுனர்கள் மற்றும் முசிறி எம் ஐ டி வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள், குடுமியான் மலை வேளாண் கல்லூரி மாணவர்கள், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

**Source: Dinakaran, Tamil Daily newspaper, Date of publication: 07.02.2023**

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் **No.1** மாலை நாளிதழ்

**MAALAI MALAR**

திருச்சி 7-2-2023 (செவ்வாய்க்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★ | மலர் 46 இதழ் 54

TRICHY 7-2-2023 (TUESDAY) 8 PAGES ₹5 | VOL: 46 ISSUE: 54

ல் சம்பவம்

## அடிமையான டித்து தற்கொலை

தாயாருக்கு தலைகுனிவை ஏற்படுத்தியது. இதனால் மகளை கண்டித்தார். இருந்த போதிலும் அவரால் மதுவை மறக்க முடியவில்லை. இந்த நிலையில் குடிபோதையில் தாய் மற்றும் குடும்பத்தினரிடம் தகராறு செய்த தமிழரசி திடீரென அரளி விதையை அரைத்து குடித்து விட்டார். உறவினர்கள் அவரை மீட்டு துறையூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இருந்தபோதிலும் அவர் சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து துறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொதுவாக கவலையை மறப்பதற்காக ஆண்கள் மது அருந்துவதாக சொல்வார்கள். ஆனால் இங்கு ஒரு விதவைப் பெண்மணி மதுவுக்கு அடிமையாகி விஷம் குடித்து தற்கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.



தென்னை மரத்தில் வெள்ளை சுருள் ஈ தாக்குதல் நோய் கட்டுப்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்ட போது எடுத்தப்படம்.

குளித்தலை அருகே

# தென்னையை தாக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி

குளித்தலை, பிப்.7.—

குளித்தலை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள தென்னை மரங்களில் தற்போது அதிக அளவு வெள்ளை சுருள் ஈ தாக்குதல் நோய் பரவி வருகிறது, இதனால் தென்னை மரங்கள் முழுவதும் காய்ந்து மரம் சேதம் அடையும் நிலையில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது,

இதனை தடுக்கும் விதமாக தென்னை மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு குளித்தலை அருகேநங்கவரம் கவுண்டம்பட்டியில் கரூர் மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் தென்னை மரங்களில் வெள்ளை சுருள் ஈ தாக்குதல் காணப்படுவதை எவ்வாறு கட்டுப்படுத்துவது குறித்து இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி செல்வராஜ் தொழில் நுட்ப பயிற்சி அளித்து விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சியில் கே.வி.கே. முதுநிலை வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள்,

வேளாண் துறை அதிகாரிகள் மற்றும் வேளாண் அறிவியல் மைய வல்லுனர்கள் மற்றும் முசிறி எம் ஐ டி வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள், குடுமியான்மலை வேளாண் கல்லூரி மாணவர்கள், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

**Source: Malai Malar, Tamil Daily newspaper, Date of publication: 07.02.2023**



தினகரன் கரூர்

12.2.2023 ● Sunday 21

ஒரு சில இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

ரூ.1 லட்சம் புகையிலை பொருட்கள் பறிமுதல் பக்கம் 22

1,843 வழக்குகளில் ரூ.21.36 கோடி தீர்வு பக்கம் 24

## அதிக சேதாரம், மகசூலை கெடுக்கும்

# தென்னையை தாக்கும் வெள்ளை சுருள் ஈக்கள்

### கட்டுப்படுத்த, விவசாயிகளுக்கு பயிற்சி

தோகைமலை, பிப். 12: அதிக சேதாரம், அதிக மகசூலை கெடுக்கும் தென்னையை தாக்கும் வெள்ளை சுருள் ஈக்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து புழுதேரி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் தோகைமலை அருகே புழுதேரி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் விவசாயிகளுக்கு தென்னையை தாக்கும் வெள்ளை சுருள் ஈக்களை கட்டுப்படுத்துதல் குறித்து தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

முன்னோடி விவசாயி அறிவழகன் என்பவர் தோட்டத்தில் நடந்த பயிற்சிக்கு வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் திரவியம் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் ஆராய்ச்சி நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி செல்வராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் வெள;ளை ஈக்களில் 2 வகைகள் காணப்படுகிறது. தற்பொழுது கரூர் மாவட்டத்தில் காணப்படும் வெள்ளை சுருள் ஈக்களால் மகசூல் மற்றும் சேதாரம் அதிக அளவில் ஏற்படாது. மேலும் தென்னையில் நல்ல மகசூல் பெறுவதற்கு தரமான 13 முதல் 15 தென்னங்கீற்றுகள் இருந்தாலே போதுமானது. இந்த வெள;ளை சுருள் ஈக்களின் தாக்கம் அடியில் காணப்படும் தென்னங்கீற்றுகளை தான் அதிகளவில் பாதிக்கிறது.

தென்னை மரங்களில் மேற்பகுதியில் காணப்படும் தென்னங் கீற்றுகளில் பாதிப்பு அதிகமாக காணப்படும் போது விவாசயிகள் கட்டுப்படுத்தும் முறைகளை கடைப்பிடிக்கலாம். இது தென்னங்கீற்றுகளின் மேல் பகுதிகளில் கருப்பு படலம் படிந்து இருக்கும். மேலும் வெள்ளை சுருள் ஈக்கள் வட்ட வடிவில் அதிகளவில் காணப்படும். இதை வைத்து விவசாயிகள் இந்த பூச்சியின் தாக்குதலை கண்டறியலாம். இந்த பூச்சியை கட்டுப்படுத்த பூச்சி கொல்லி மருந்துகளை கண்டிப்பாக பயன் படுத்தக்கூடாது.

புழுதேரி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் தென்னை வளர்ப்பு விவசாயிகளுக்கு, தென்னையில் வெள்ளைச்சுருள் ஈக்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**எப்படி கட்டுப்படுத்தலாம்:** தென்னை மரங்களில் இந்தவகை பூச்சி தாக்குதலை கண்காணிக்க மஞ்சள் வண்ண ஒட்டு பொறி வைக்க வேண்டும். வெளி இடங்களிலிருந்து தென்னங் கன்றுகள் எடுத்து வரும் போது, இதை கண்காணிக்க வேண்டும். இதில் (வெள்ளை சுருள் ஈக்களை) இப்பூச்சி தாக்குதலுக்கு உட்பட்ட தோட்டங்களிலிருந்து கொண்டு வந்து நடவு செய்யக் கூடாது. ஒரு எக்டேருக்கு கிரைசோபிட் முட்டைகள் ஆயிரம் எண்ணிக்கையில் 15 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து கட்ட வேண்டும். பூச்சி தாக்குதல் அதிகமாக தென்படும் பொழுது இலை வழி தெளிப்பாக ஐஸாரியா உயிர் பூஞ்சாண கொல்லிை 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். இப்பூச்சி தாக்குதல் காணப்படும் அனைத்து தென்னை மரங்களுக்கும், இந்த கட்டுப்படுத்தும் முறைகளை ஒரே நேரத்தில் விவசாயிகள் அனைவரும் கடைப்பிடிப்பதன் மூலம் இப்பூச்சியினை கட்டுப்படுத்தலாம். இப்பூச்சி தாக்குதல் தென்பட்டால் உடனடியாக தோகைமலை அருகே உள்ள புழுதேரி வேளாண் அறிவியல் மையத்தை விவசாயிகள் அனைவரும் தொடர்பு கொள்ளலாம். இதன் மூலம் உயிர் பூஞ்சாண கொல்லிகளை இலை வழியாக தெளிப்பதன் வாயிலாகவும், ஒட்டுண்ணி கட்டுவதன் மூலமும் இப்பூச்சியினை கட்டுப்படுத்தலாம்.

இதேபோல் தென்னை மரங்களுக்கு முறையான ஊட்டச்சத்துகளை அளிப்பதன் மூலம் இப்பூச்சியின் தாக்குதலை வெகுவாக குறைக்கலாம் என்று பல்பேறு தலைப்புகளில் தென்னை வளர்ப்பு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து விவசாயிகளுக்கு உயிர் பூஞ்சான கொல்வி தெளிப்பு மற்றும் ஒட்டுண்ணி விடுதல் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் கவியரசு, தமிழ்செல்வி, திருமுருகன், திட்ட உதவியாளர் தமிழ்செல்வன் உள்பட விவசாயிகள் மற்றும் வேளாண் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

**Source: Dinakaran, Tamil Daily newspaper, Date of publication: 12.02.2023**

## Videolink:

[https://databases.nbair.res.in/videogallery/Karur%20demonstration%202023.mp4](https://databases.nbair.res.in/videogallery/Karur%20demonstration%202023.mp4)